सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் 23 மார்ச் 2014 ஞாயிற்றுக்கிழமை ‘‘வண்ணங்களின் பண்டிகை’’ எனப்படும் ஹோலி பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஹோலி பண்டிகை மார்ச் மாதம் குளிர்கால முடிவில் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. இது இந்துக்களின் பண்டிகையாக வட இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. குளிர்கால இறுதியில் வசந்தகாலத்திற்கு கட்டியம் கூறுவது போல் வாழ்க்கையின் மீளுருவாக்கத்தை குறிப்பதாக நிகழ்த்தப்படுகிறது. மன்னிப்பதன் மூலம் அனைவரும் சந்தோசப்படும் ஓர் பண்டிகையாக இது கொண்டாடப்படுகிறது. மக்கள் ஒருவருக்கொருவர் வண்ணப்பொடிகளை தூவி மகிழ்ச்சிப்படுத்துவர். பாடலும், நடனமும் இப்பண்டிகையை மேலும் சிறப்பாக்கும். இப்பண்டிகை பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் பிறப்பிடமாகிய பிரஜ் பூமியின் சிறிய நகரமாகிய மதுராவில் வெகு சிறப்பாக கொண்டாடப்படும். இப்பண்டிகையின் முதல்நாள் இரவு அக்னியின் முன் பிரார்த்தனை செய்வார்கள். இப்பண்டிகையின் போது பொதுவான வாழ்த்து ‘‘ஹப்பி ஹோலி’’ ஆகும்.

யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் முதல்முறையாக இந்திய அதிகாரிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தூதரக பணியாளர்கள் அனைவரும் இணைந்து இப்பண்டிகையை கொண்டாடினார்கள். முதலில் ஒவ்வொருவரின் நெற்றியிலும் பாரம்பரிய முறையின்படி வண்ணங்களை பூசி பின்பு வண்ணப்பொடிகளை ஒருவருக்கொருவர் மீது தூவி கொண்டாடப்பட்டது. யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் ‘‘ இந்தியா கோர்னர்’’ இல் கற்கும் இலங்கை மாணவர்களும் இப்பண்டிகையில் பங்கு பற்றியிருந்தனர்.

*25.03.2014*

யாழ்ப்பாணம்